
மாலை முரசு

பக்கங்கள் 16+ 02

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 28 புதன்கிழமை 13.08.2025 | அதிர்வு 013

## இனந்தெரியாத கும்பலால் ஆண் ஒருவர் படுகொலை!

(க.மகாதேவன்)



சீதுவையில் இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் நபர் ஒருவர் கூறிய 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# இந்த அருமையான வாய்ப்பை அரசு கோட்டை விடக் கூடாது!

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையிடம் அழுத்தமான கோரிக்கை

சர்வதேச குற்றங்கள் உட்பட கடந்த காலங்களில் செய்யப்பட்ட கடுமையான மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்குத் தண்டனை விலக்களிப்பு வழங்கும் போக்கிலிருந்து விடுபடவும், மாற்றத்துக்கான சீர்திருத்தங்களைச் செயல்படுத்தவும், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள நீதி மற்றும் பொறுப்புக்கூறலை வழங்குவதற்கும் கிடைத்திருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுமாறு இலங்கை அரசை வலியுறுத்திக் கேட்டிருக்கின்றார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க். 03▶

# மனித உரிமை மீறல்கள் இலங்கையில் மோசம்!

## அமெரிக்கா கவலை தெரிவிப்பு



இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்கா தனது 2024 ஆம் ஆண்டு மனித உரிமை நடைமுறைகள் குறித்த நாட்டு அறிக்கைகளில் கடுமையான கவலைகளை எழுப்பியுள்ளது.

2022 ஆம் ஆண்டு ‘அரகலய’ போராட்ட இயக்கத்துக்குப் பிறகு இலங்கையின் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஜனாதிபதி அதிகாரத்துக்கு இந்த ஆண்டில் (2024 இல்) வந்தததார் என அறிக்கை 02▶



# செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு வழிபடச் சென்ற பெண்ணே தொண்டைமானாறு கடல்நீரேரியில் இருந்து சடலமாக மீட்பு

(எஸ்.நிதர்ஷன்)

செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை காலை வழிபடச் சென்ற பெண்ணே மாலை ஆலயத்துக்குப் பின்புறமாக உள்ள தொண்டைமானாறு கடல் நீரேரியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலி, தோப்பு பகுதியைச் சேர்ந்த இராஜலிங்கம் சுபாஷினி (வயது 40) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தப் பெண் நேற்றுக் காலை வீட்டில் இருந்து ஆலயத்துக்குச் செல்வதாகக் கூறி சென்ற நிலையில் இரவாகியும் வீடு திரும்பாத நிலையில், பெண்ணின் பெற்றோர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றிருந்தனர்.

அதன்போதே மாலை தொண்டைமானாறு கடல் நீரேரியில் இருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறி புகைப்படங்களைப் பெற்றோரிடம் காட்டியுள்ளனர்.

அதையடுத்துப் பெற்றோர் சடலமாக மீட்கப்பட்ட பெண் தமது மகளே என அடையாளம் காட்டியுள்ளனர்.

அதேவேளை, சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், பரிசோதனை அறிக்கை வெளிவந்த பின்னரே உயிரிழப்புக்கான காரணம் தொடர்பில் கூற முடியும் என்று தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அதிசொகுசு பஸ் மோதி ஒருவர் பரிதாப மரணம்

(க.மகாதேவன்)

புத்தளம் – திருகோணமலை பிரதான வீதியில் புத்தளத்தில் இருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்த அதிசொகுசு பஸ் ஒன்று சைக்கிளைத் தள்ளிக்கொண்டு பாதையைக் கடக்க முற்பட்டவர் மீது மோதியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதில் பலத்த காயமடைந்த மேற்படி நபர் நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி மரணித்துள்ளார்.

உயிரிழந்த நபர் 54 வயதுடைய நொச்சியாகம, மொரவக கந்த பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.சடலம் நொச்சியாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளது. ஆனால், துஷ்பிரயோகங்களுக்கு அதிகாரிகளைப் பொறுப்பேற்கச் செய்வதில் அரசு 'குறைந்தபட்ச நடவடிக்கைகளையே' எடுத்ததாக அந்த அறிக்கை குறை கூறியுள்ளது.

ஜனவரி மற்றும் ஓகஸ்ட் மாதங்களுக்கு இடையில் (முன்னைய ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில்) மனித உரிமைகள் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட ஏழு காவல் மரணங்கள், ஒப்புதல் வாக்கு மூலங்களைப் பெறுவதற்காக சித்திரவதை செய்யப்பட்டனர் எனக் கூறப்படும் சம்பவங்கள் மற்றும் விமர்சகர்களை தடுத்து வைக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவை முக்கிய அவதானிப்புகளில் அடங்கும் என அறிக்கை விவரித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் பத்திரிகையாளர்களைத் துன்புறுத்துதல், சர்வதேச சமவாயச் சட்டத்தின் கீழ் கைது செய்தல் மற்றும் அரசின் பழிவாங்கல் அல்லது விளம்பர வருவாயை இழக்கச் செய்தல் குறித்த அச்சத்தால் இயக்கப்படும் சுய தணிக்கை உள்ளிட்ட ஊடகக் கட்டுப்பாடுகளையும் அமெரிக்கா எடுத்துக்காட்டியுள்ளது.

தொழிலாளர் உரிமைகள் நடைமுறையாக்கம் மோசமாக இருப்பது, ஓரங்கட்டப்பட்ட பெண்களுக்கு கட்டாய கருத்தடை செய்யப்பட்டதாகக் கூறப்படுவது மற்றும் மனிதப் புதைகுழி விசாரணைகள் உட்பட போர்க்கால காணாமல் போன வழக்குகளில் மெதுவான முன்னேற்றம் ஆகியவை அடங்கும் என்று அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இணையப் பாதுகாப்புச் சட்டத்தையும் அறிக்கை விமர்சித்ததுள்ளது. எதிர்ப்புக்களை அடக்க இது பயன்படுத்தலாம் என்று அறிக்கை எச்சரித்துள்ளது.

தண்டனையிலிருந்து விலக்களித்தல் 'ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாக' நீடிக்கின்றது, துஷ்பிரயோகங்களுக்கு குற்றம் சாட்டப்பட்ட பாதுகாப்புப் படையினருக்கு எதிரான நீதித்துறை நடவடிக்கை குறைவாகவே இருந்தது என்று அறிக்கை உறுதி செய்துள்ளது.

## ஆண் ஒருவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதங்களால் தாக்கிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த மேற்படி நபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இரியகஹலிந்த பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எந்தச் சந்தேகநபர்களும் கைது செய்யப்படவில்லை.

மேலும் சம்பவத்துக்குக் காரணமானவர்களைக் கைது செய்ய சீதுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# மட்டக்களப்பில் நீதி கோரி கவனவீர்ப்புப் போராட்டம்

(கனகராசா சரவணன்)

செம்மணி, முல்லைத்தீவு மற்றும் சட்டவிரோத சமூகச் செயற்பாடுகளுக் கான நீதி கோரும் கவனவீர்ப்புப் போராட் டம் இன்று புதன்கிழமை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இடம்பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் விடுத்த அழைப்புக் கிணங்க காந்தி பூங்காவில் இன்று காலை 9 மணியளவில் இந்தப் போராட் டம் ஆரம்பமானது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்க ளான இரா.சாணக்கியன், ஞா.சிறி நேசன், வைத்தியர் இ.சிறிநாத், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் மற்றும் பிரதேச சபை சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இந்த அருமையான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரி மைகள் அலுவலகம் இன்று வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

"இன்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவது, சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுப்பது, பாகுபாடு மற்றும் பிளவு படுத்தும் அரசியலை நீக்குவது உள்ளிட்ட நீண்டகால பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு இலங்கை கடந்த காலத்திலி ருந்து மீண்டெழுவதற்கு அருமையான ஒரு வாய்ப்பை முன்வைப்பதற்கு அரசி யல் தலைமைக்கு சந்தர்ப்பம் கிட்டியி ருக்கின்றது. இந்த உறுதிமொழிகளை பயனுள்ள விளைவுகளாக மாற்றுவதற்கு இப்போது ஒரு விரிவான சாலை வரைபடம் தேவை" – என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தச் செயல்முறை, உள்நாட்டுப் போரின் போது நடந்த மீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் குற்றங்கள், அரசு மற்றும் பாதுகாப்புப் படையினர், அதேபோல் எல்.ரி.ரி.ஈ. போன்ற அரசு சாராத ஆயுதக் குழுக்களின் பொறுப்பு மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூகங்கள் மீது இந்த வன்முறையின் நீடித்த தாக்கம் ஆகியவற்றின் தெளிவான மற்றும் முறையான ஏற்றுக்கொண்ட ஒப்புதலுடன் தொடங்க வேண்டும். இலங்கைக்கு எனது விஜயத்தின் போது நான் நேரில் கண்டமை போல, பாதிக்கப் பட்டவர்களின் வலி மற்றும் துன்பம் இன்னும் தெளிவாகத் தெரிகின்றது. மேலும் உண்மை மற்றும் நீதிக்கான அவர்களின் கோரிக்கைகள் கவனிக்கப்பட வேண்டும்." – என்றும் ஐ.நா. மனித உரி மைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையா ளர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட சொற்ப காலத்தி லேயே இந்த அறிக்கை வெளியாகியுள் ளது. இலங்கையில் அவர் அரசு, சிவில் சமூகம், பாதிக்கப்பட்டவர்களின் குழுக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் மதத் தலை வர்களுடன் கலந்துரையாடி, திருகோ ணமலை, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய் தார்.

இந்த அறிக்கை பாதுகாப்புத் துறை யின் விரிவான கட்டமைப்பு சீர்திருத்தத் துக்கும், நாட்டின் சர்வதேச மனித உரி மைகள் தொடர்பான கடமைப்பாடுகளுக்கு இணங்க பரந்த அரசமைப்பு, சட்ட மற்றும் நிறுவன சீர்திருத்தங்களுக்கும் அழைப்பு விடுக்கின்றது.

"இந்த நடவடிக்கைகள் அரசின் 'தேசிய ஒற்றுமை' என்ற தொலைநோக்கு பார் வையை உணர்ந்து கொள்வதற்கும், எல்லாவற்றுக்கும் மேலாக கடந்த கால மீறல்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கும் மிக முக்கியமா னவை." – என்றும் வோல்கர் டர்க் கூறியுள்ளார்.

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை முன்னேற் றுவதில் இலங்கையை ஆதரிப்பதற்கான ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஒரு சுயாதீனமான பொது வழக்குத் தொடுநர் அலுவலகத்தை நிறுவுவதற் கான அரசின் முன்முயற்சியை அறிக்கை வரவேற்கின்றது.

கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத் தின் கடுமையான மீறல்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க ஒரு சுயாதீனமான சிறப்பு ஆலோசகர் உட்பட ஒரு அர்ப் பணிப்புள்ள நீதித்துறை பொறிமுறையை நிறுவ அறிக்கை பரிந்துரைக்கின்றது.

மேலும், வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட நிலங்க ளை விடுவித்தல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்தல் மற்றும் நீண்டகாலமாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப் பட்டவர்களை விடுவித்தல் (அவர்களில் சிலர் இப்போது பல தசாப்தங்களாக சிறையில் உள்ளனர்.) ஆகியவற்றையும் அறிக்கை கோருகின்றது.

இலங்கையிலும் சர்வதேச அளவிலும் அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்கு பங்களிக்கு மாறு இந்த அறிக்கை சர்வதேச சமூகத் தையும் வலியுறுத்துகின்றது.

"சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களை விசாரித்து, வழக்குத் தொடுத்து, பொறுப் புக்கூறலை உறுதி செய்வதற்கான முதன்மை பொறுப்பு இலங்கை அரசிடம் இருந்தாலும், இதை சர்வதேச வழிமுறைக ளால் பூர்த்தியாக்கி ஈடு செய்ய முடியும்" என்றும் அறிக்கை கூறுகின்றது.

குறிப்பாக பொறுப்புக்கூறல் தொடர் பான பணிகளை மேற்கொள்வதற்கும் நல்லிணக்க முயற்சிகளுக்கு பங்களிப் பதற்கும் ஐ.நா. மனித உரிமைகள் அலு வலகத்தின் வலுப்படுத்தப்பட்ட திறனைப் பயன்படுத்த ஐ.நா. உறுப்பு நாடுகளை அறிக்கை வலியுறுத்துகின்றது.

நினைவுகூரல் மற்றும் விவாதத்துக்கு அரசு இடம் அளித்துள்ள நிலையில், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களை – குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட் டவர்கள் மற்றும் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளுக்காகச் செயற்படுபவர் களை – காணித் தகராறுகள் மற்றும் சுற் றுச்சூழல் பிரச்சினைகளுக்ககப் பணி யாற்றுபவர்களை – குறிவைத்துத் தொடர்ந்து மிரட்டல்கள் மற்றும் துன்பு றுத்தல்கள் இடம்பெறுகின்றமையை அறிக்கை விவரிக்கின்றது.

அத்துடன் காணாமல்போனவர்களின் குடும்பங்கள் மிரட்டப்படுகின்றமை மற்றும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின் றமை ஆகியவற்றையும் அறிக்கை விவரிக்கின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான உறுதிமொழிகள் இருந்தபோதிலும், புதிய அரசு மக்களைக் கைது செய்து தடுத்து வைக்க இந்தச் சட் டத்தைத் தொடர்ந்து பயன்படுத்துகின்றது.

தொடர்ந்து நடைபெறும் தன்னிச்சை யான கைதுகள் மற்றும் தடுப்புக்காவல்கள், சித்திரவதைகள் மற்றும் காவலில் உள்ள மரணங்கள் ஆகியவற்றை இந்த அறிக்கை விவரிக்கின்றது.

மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத் தைப் பயன்படுத்துவதற்கு உடனடித் தடை விதிக்குமாறு அரசை அது வலியு றுத்துகின்றது.

கருத்து வெளிப்பாடு மற்றும் கருத்துச் சுதந்திரம், கூட்டிணைதல் மற்றும் அமை தியான ஒன்றுகூடல் போன்ற அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தும் பிற சட்டங்கள் அல்லது முன்மொழியப்பட்ட சட்டங்களைத் திருத்தவோ அல்லது இரத்துச் செய்யவோ அறிக்கை கோருகின் றது. இதில் இணையப் பாதுகாப்புச் சட்டம், சர்வதேச் சிவில், அரசியல் பட்டயச் சட்டம், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் தொடர்பான சட்ட வரைவு மற்றும் தனிப் பட்ட தரவு பாதுகாப்புச் சட்ட வரைவு ஆகிய வையும் அடங்கும்.

பொருளாதார நெருக்கடி மற்றும் தற்போதைய கடன் சுமையின் கடுமை யான தாக்கங்களையும் – குறிப்பாக ஏழ் மையானவர்கள் மற்றும் பிற பாதிக் கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ளவர்க ள், தோட்டத் துறையில் உள்ள மலையகத் தமிழ் சமூகம் உட்பட அனைத்து இலங் கையர்களுக்கு ஏற்படும் தாக்கங்களையும் இந்த அறிக்கை ஆராய்கின்றது.

பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை உணரத் தேவையான நிதி இடத்தை அரசுக்கு வழங்கவும், சிக்கன நடவடிக்கைகள் நாட்டின் மனித உரிமைகள் கடமைகளை நிறைவேற்றுவ தற்கான திறனைக் குறைமதிப்புக்கு உட்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்ய வும் சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் வெளிப்புறக் கடன் வழங்குநர்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் வோல்கர் டர்க் அந்த அறிக்கையில் வலியுறுத்துகின்றார்.



# அசாத் மௌலானா வெகுவிரைவில் இலங்கைக்கு!

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணை தீவிரம்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் ஊடகச் செயலாளரான அசாத் மௌலானா வெகுவிரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று அரசின் முக்கிய அமைச்சர் ஒருவரை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தனுக்கும் தொடர்புகள் இருப்பதாக அசாத் மௌலானா என்றழைக்கப்படும் ஹன்சீர் முஹம்மத் பரபரப்பு தகவல்களை வெளியிட்டிருந்தார்.

அத்துடன் பிள்ளையானின் வேண்டுகோளின் பிரகாரம் பிள்ளையானுக்கு நெருக்கமாகத் தான் உள்ளிட்ட குழுவொன்று இராணுவப் புலனாய்வுத் துறையின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேவுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

தற்போதைக்கு அசாத் மௌலானா வெளிநாட்டில் தலைமறைவாக வாழ்ந்து வரும் நிலையில் கடுமையான முயற்சிகளின் பின்னர் அரசின் முக்கியஸ்தர்கள் அவருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

அதன் பிரதிபலனாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைக்கவும், அது தொடர்பில் விரிவான வாக்குமூலம் ஒன்றை வழங்கவும் அசாத் மௌலானா இலங்கை வர சம்மதம் தெரிவித்துள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

வெகுவிரைவில் அவரை இலங்கைக்கு அழைத்து வரும் செயற்பாடுகளை அரசு முன்னெடுத்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.



# ஜனநாயகப் போராட்டம் வன்முறையடையாதிருக்க அரசு அவதானம் செலுத்த வேண்டியது அவசியம்!

## வலி.வடக்கு மீழ் குடியேற்ற சங்க உறுப்பினர் அன்ரனி சுபாஸ் தெரிவிப்பு

(எஸ். நிதர்ஷன்)

வலி வடக்கு மக்களின் உணர்வுகளில் அரசும் அரச அதிகாரிகளும் அக்கறை கொண்டு அவர்கள் முன்னெடுத்துவரும் ஜனநாயக வழி போராட்டம் வன்முறை வழி நோக்கி செல்லாதிருக்கும் வகையில் அவதானம் செலுத்த வேணடும்.

இவ்வாறு வலி. வடக்கு மீள் குடியேற்ற சங்க உறுப்பினர் அன்ரனி சுபாஸ் வலியுறுத்தியுள்ளார்.

காணிகளை இழந்த வலி. வடக்குக் காணி உரிமையாளர்கள் யாழ். பாடி தனியார் விடுதியில் ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

இதன்போது காணிகளை இழந்த வலி. வடக்கு உரிமையாளர்களால் கடந்த சில நாள்களுக்கு முன்னர் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களிலும், ஐ.நா. அலுவலகம் மற்றும் மனித உரிமை தலைமை அலுவலகம் ஆகியவற்றிலும் வலி வடக்கு காணி விடுவிப்பு தொடர்பில் மேற்கொண்ட பரிந்துரை செயற்பாடுகள் தொடர்பாக தெளிவூட்டுகையில் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர் மேலும் கூறுகையில்,

நாம் எமது பூர்வீக நிலங்களையே மீளப்பெறும் நோக்குடன் கடந்த 35 வருடங்களுக்கு மேலாகப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

ஆனால், அரசுகள் மாறினாலும் அரச பொறிமுறையிலோ அரச அதிகாரிகளின் மனோ நிலையிலோ மாற்றங்கள் ஏதும் இல்லாதுள்ளது.

நாம் எமது நிலத்துக்காகப் போராடிப் போராடி சந்ததிகளை கடந்து கொண்டிருக்கின்றோம். அதவிட ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதே உண்மை.

எமது ஜனநாயக வழி போராட்டத்தைத் தொடர்ந்தும் அரசு கண்டுகொள்ளாமல் இருக்குமானால் அது கடந்த காலங்கள் போன்று வன்முறை வழிமுறைக்கும் செல்லும் ஆபத்து இருக்கின்றது.

இந்த மாற்றங்கள் உருவாகாது தீர்வை கொடுக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும்.

நாம் தொடர்ந்தும் அகிம்சைவழியிலா அல்லது வன்முறை வழியிலா போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டியது இன்றைய அரசின் பொறிமுறையில் தான் உள்ளது.– என்றார்.

# மனைவி வெளிநாட்டில்; கணவன் சடலமாக மீட்பு!

## பேருவளை பொலிஸார் தீவிர விசாரணை

வீடொன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறையில், பேருவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதனாகொடகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலிருந்து நேற்று மாலை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பேருவளை, பதனாகொடகம பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடையவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் இரண்டு நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலமாக மீட்கப்பட்டவரின் மனைவி வேலை நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளதால் அவர் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலமானது வீட்டில் உள்ள கட்டில் மேதுள்ளனர். தனர்.

இது தொடர்பான தீவிர விசாரணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# புதிய பொலிஸ்மா அதிபர்

இலங்கை பொலிஸ் சேவையில் 36 வருடங்கள் பணியாற்றியுள்ள சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய நாட்டின் 37 ஆவது பொலிஸ்மா அதிபராக நியமனம் பெறுகிறார்.

அவரது நியமனத்திற்காக ஜனாதிபதி வழங்கிய பரிந்துரையை அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரித்திருக்கின்றது.

கடந்த 11 மாத காலமாக பதில் பொலிஸ்மா அதிபராகப் பணியாற்றியவர், இனிமேல் பொலிஸ்மா அதிபராகக் சேவையாற்றுவார்.

இலங்கை பொலிஸ் துறையின் 158 வருட சரித்திரத்தில் அந்தச் சேவையின் மிகக்கனிஷ்ட நிலையானகான்ஸ்டபிள் தரத்தில் பொலிஸ் சேவையில் சேர்ந்த ஒருவர் அந்தச் சேவையின் தரத்தில் மிக உச்சப் பதவியான பொலிஸ்மா அதிபர் பதவிக்கு உயர்ந்த ஒரேயொருவர் என்ற சாதனையை அவர் நிலை நாட்டி இருக்கின்றார். இது எப்படி 36 ஆண்டுகளில் சாத்தியமானது என்பது குறித்து பலரும் கவனிக்கவில்லை.

அவர் 1988 இல் கான்ஸ்டபிள் ஆக சேவையில் சேர்ந்தார். 92 இல் சப் இன்ஸ்பெக்டர் பதவி உயர்வு பெற்றார். ஆனால் அந்தச் சமயத்தில் தமது பொலிஸ் சேவைக்கு மேலதிகமாக கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டமாணி பட்டதாரியாக அவர் உயர்ந்தார். தொடர்ந்து சட்டத்தரணி பரீட்சையிலும் தேர்ச்சி பெற்றார். இந்த தேர்ச்சி காரணமாக சப் இன்ஸ்பெக்டர் பதவியில் இருந்த அவர் நேரடியாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். இந்தப் பதவி உயர்வும் அதன் பின்னரான அவரது மெச்சத்தக்க சேவையும் அடுத்த 25 வருடங்களில் அவரை நாட்டின் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு உயர்த்தி இருக்கின்றன. பொலிஸ் சேவையிலிருந்து கொண்டு தனது கல்வித் தகைமையை உயர்த்திய அவரது அயராத முயற்சி அவரை மேல் நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றது எனலாம்.

சர்ச்சைக்குரிய விதத்தில் முன்னைய பொலிஸ்மா அதிபர்கள் பலரும் அப் பதவிக்கு நெருக்கடியை ஏற்படுத்திச் சென்றிருக்கும் சமயத்தில், அந்த சவாலான பதவியை பிரியந்த வீரசூரிய இப்போது ஏற்கின்றார்.

ஏற்கனவே பதில் பொலிஸ்மா அதிபராக இருந்த சமயத்தில் பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்கள் தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவோடு நேரடியாக முரண்பட்டு, மோதி, முட்டுப்பட்டு பல்வேறு நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் சர்ச்சைகளையும் எதிர்கொண்டவர். இந்த விடயங்களில் பக்கம் சாராமல் சுயாதீனமாக முடிவெடுப்பதன் மூலம் சர்ச்சைக் குரியவராக மாறியவர் என்ற பெயரும் அவருக்கு உண்டு.

பாதாள உலகக் குழுவின் அடாவடித்தன சாம்ராஜ்யம், போதை வஸ்து வர்த்தக கும்பல்களின் ஏகபோக சர்வாதிகாரம் போன்ற பல்வேறு வன்முறைக் கூட்டுக்களின் நெருக்கடிகளை அடக்க வேண்டிய ஒரு இக்கட்டான சமயத்தில், ஏற்கனவே அவை தொடர்பில் கனகாத்திரமான நடவடிக்கைகளை பதில் பொலிஸ்மா அதிபராக முன்னெடுத்து இருக்கும் பிரியந்த வீரசூரிய, அந்த நடவடிக்கைகளை இனிமேல் எப்படி வகுத்துத் தொடரப் போகிறார், அரசியல் தலைமைப் பீடங்களின் தார்மீக முறையற்ற நெருக்கடிகளுக்கும் அழுத்தங்களுக்கும் எவ்வாறு முகம் கொடுத்து தமது பொலிஸ் துறையின் தனித்துவத்தைக் காப்பாற்றி முன்னெடுத்துக் கொண்டு செல்ல போகின்றார், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவோடு இணைந்து காரியங்களை எவ்வாறு முன்னெடுக்கப் போகின்றார் என்பவை எல்லாம் அவரது இந்தப் பதவிக் காலத்தில் புதிய சவால்களாக இருக்கப் போகின்றன.

## 60 வருடங்களாகப் புறக்கணிக்கும் அரசு

# தட்டாங்குள வீதிக்கு நீதி வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு!

**(எஸ். நிதர்ஷன்)**

60 வருடங்களாக புனரமைக்காமல் அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டு வரும் மீசாலை தட்டாங்குளம் வீதியைப் புனரமைக்குமாறு உத்தரவிடக்கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (12) வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் பிரதிவாதிகளான சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருடைய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் குறித்த வீதியில் வசித்துவரும் வி.வாகீசன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மீசாலை தட்டாங்குளம் வீதியை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை மாணவர்களும், ஏராளமான பொது மக்களும் பயணம் செய்யப் பயன்படுத்தும் பிரதான வீதியாகக் காணப்படுகின்றது.

இந்த வீதி கடந்த 60 வருடங்களுக்கு மேலாக எந்த விதமான புனரமைப்பும் செய்யப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் சகல அரச திணைக்களங்களுக்கும் தெரியப்படுத்தியும், புனரமைக்குமாறு கோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருந்த போதும் எந்தவிதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

குறித்தவீதியைப்புனரமைப்பதற்காக முன்னாள் பிதேச சபை செயலாளரால் 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது என்றும் வடமாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தால் பி.எஸ்.டி.ஜி. நிதியில் 18 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் கடிதம் மூலம் மனுதாரருக்கு அறியத்தந்தும் இன்றுவரை எந்த விதமான புனரமைப்புப் பணிகளும் நடைபெற்றிருக்கவில்லை.

இவ்வாறு குறித்த வீதி புனரமைப்புக்கான ஆக்க பூர்வமான எந்த ஒரு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாததை அடுத்து மனுதாரர் நீதிமன்றத்தை நாடியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் மனுதாரர் சார்பில் சட்டத்தரணி பிரவின் பிரேமதிலகவும், சிரேஷ்ட சட்டத்தரணிகளான தனுக்க ராகுமத்த மற்றும் நிசித் அபேசூரிய ஆகியோரும் மன்றில் ஆஜராகினர்.

இந்த வழக்கு விசாரணைகளை செப்ரெம்பர் 4 ஆம் 5 ஆம் திகதிகளில் நடத்த மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் மனுதாரர்களின் சட்டத்தரணிகளால் கோரப்பட்டுள்ளது.

# பொறியில் சிக்கியிருந்த சிறுத்தை உயிருடன் மீட்பு

**(பி.கேதீஸ்)**

கண்டி, பல்லேகலை முதலீட்டு வலையத்தில் உள்ள காட்டுப் பகுதியில் கம்பியைப் பயன்படுத்தி வைக்கப்பட்டிருந்த பொறி ஒன்றில் சிக்கியிருந்த சிறுத்தை ஒன்றை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மீட்டுப் பாதுகாப்பான ஓரிடத்தில் அதனை விடுதலை செய்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக ரன்தெனிகல வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு சென்ற குழுவினர் மேற்படி சிறுத்தைக்கு மயக்க ஊசி செலுத்தி அதனைப் பொறியில் இருந்து மீட்டெடுத்தனர்.

பின்னர் அந்தச் சிறுத்தையை அவர்கள் ரந்தெனிகல பிரதேசத்துக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பான இடத்தில் விடுவித்தனர்.

வனஜீவராசிகள் திணைக்கள மிருக வைத்தியர் அக்கலங்க பினிதிய தலைமையிலான குழுவினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சுமார் 6 – 7 வயது மதிக்கத்தக்க நன்கு வளர்ந்த மேற்படி ஆண் சிறுத்தைக்கு எதுவித உட்காயங்களும் இருக்கவில்லை என்றும், எனவே அதன் வெளிக்காயங்களுக்கு மட்டும் அவசியமான சிகிச்சையை வழங்கி அதனைக் காட்டில் விடுவித்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.





# சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கான பயணம் புனித யாத்திரையாக இலங்கை அரசால் ஏற்பு

இந்தியாவின் கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு இலங்கை பக்தர்கள் ஆண்டுதோறும் செல்லும் புனித யாத்திரையை அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புனித யாத்திரையாக அங்கீகரிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நவம்பர் 1 முதல் ஜனவரி 31 வரை ஒவ்வொரு ஆண்டும் 15,000க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் கோயிலுக்கு பயணம் செய்கின்றனர் என அமைச்சரவைச் செய்தித் தொடர்பாளர் அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்த முன்மொழிவை புத்த மதம், மதம் மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் அமைச்சரவையில் முன்வைத்தார்.

# குருநகர், றெக்கிளமேசனில் உடைந்துள்ள பாலத்தைத் திருத்த நடவடிக்கை முன்னெடுப்பு

## யாழ். மாநகர சபை உறுப்பினருமான விக்ரர்குமார் சுறேன் நடவடிக்கை



குருநகர், றெக்கிளமேசன் மேற்கு புதிய கடற்கரைவீதியில் உள்ள பாலத்தில் பாரிய உடைவு காணப்படுகிறது. இதன் திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாகச் சிதைந்த நிலையில் உயிர் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையில் காணப்பட்ட குருநகர் றெக்கிளமேசன் பாலத்தின் திருத்தம் தொடர்பில் பல தரப்பினரிடம் முறையிட்டும் தீர்வு கிடைக்கவில்லை.

இந்த நிலையில் யாழ். மாநகர சபையின் கல்வி விளையாட்டுக் குழுத் தலைவரும் மாநகர சபை உறுப்பினருமான விக்ரர்குமார் சுறேன் இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளார்.

குருநகரில் அமையப்பெற்றிருக்கும் வீதி அதிகார சபையின் அலுவலகத்தில் பொறியியலாளரை நேரில் சந்தித்து உடனடியாக இந்த வேலையை ஆரம்பிக்க வேண்டும் என்பதைக் காத்திரமாகச் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் வேலைகளை ஆரம்பிப்பதற்கு யாழ். மாநகர சபையின் உதவியம் தேவை என்று கேட்டிருந்தார். ஜே.சி.பி., ரக்டர் வாகனங்களைத் தந்து உதவுமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

வாகனங்கள் வழங்கினால் உடனடியாகக் குறித்த வேலைகளை ஆரம்பிக்கலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

இதற்கு அமைவாக அதற்குரிய அனுமதியைப் பெற்று கொடுத்து, வேலையை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர சபையின் கல்வி விளையாட்டுக் குழுத் தலைவரும் உறுப்பினருமான விக்ரர்குமார் சுறேன் தெரிவித்துள்ளார்.



# யாழ்ப்பாணம் மாநகர சபை

**இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணிபக்கடைகள், சந்தை, சிற்றுண்டிச்சாலைகள், வாகனத்தரிப்பிடக் குத்தகை, மலசல கூட சுத்திகரிப்புபணி, நடமாடும் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி , கேள்வி அறிவித்தல் - 2025 (01.09.2025 – 31.12.2025)**

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா **1,180.00** (வற் வரியுடன்)

கேள்விப் படிவம் விநியோகித்தல் - 13.08.2025 – 25.08.2025 **(மு.ப 9.00 - பி.ப.2.30.00 மணி வரை)**

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 26.08.2025 மு.ப 10.00 மணி வரை

கேள்வி திறத்தல் - 26.08.2025 .மு.ப 10.00 மணிக்கு

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **26.08.2025 ம் திகதி மு.ப 10.00 மணிக்**கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார் . அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
4. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
5. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
6. குத்தகை தொடர்பான ஏனைய நிபந்தனைகளை நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நிபந்தனையின் பிரதி தேவைப்படின் அலுவலகநேரத்தில் மாநகரசபை வளாகத்தில் உள்ள நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும
7. கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகையின் 1/3 வைப்புப்பணத்தை 29.08.2025 ம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்..

| இல | முகவரி | கடை இல | பிணைப் பணம் | 01.09.2025 - 31.12.2025 வரையான காலப்பகுதிக்கான குத்தகைக்கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கருவாட்டுக்கடை | **இல 02** | 5,000.00 | 19,366.67 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 428,333.33 |
| 3 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 533,900.00 |
| 4 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 47,000.00 |
| 5 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 220,000.00 |
| 6 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 333,716.67 |
| 7 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 235,295.67 |
| 8 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 593,750.00 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 188,416.67 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 87,115.00 |
| 11 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 210,000.00 |
| 12 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 69,321.69 |
| 13 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 48,741.81 |
| 14 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 43,358.55 |
| 15 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 48,156.92 |
| 16 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 174,333.33 |
| 17 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 165,433.33 |
| 18 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 145,000.00 |
| 19 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 183,334.00 |
| 20 | குருநகர் கோழி இறைச்சிக்கடை | | 5,000.00 | 333,666.67 |
| 21 | புங்கன்குளம் உள்ளூர் உற்பத்தியாளர் அறிமுகச் சந்தை | | **2,000.00** | 2,188.19 |
| 22 | யாழ் பொதுநூலக சிற்றுண்டிச்சாலை | | 5,000.00 | 123,666.33 |
| 23 | துரையப்பா விளையாட்டு அரங்கு சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 38,333.33 |
| 24 | வாகனத்தரிப்பிடக் குத்தகை | | 40,000.00 | 1,203,033.33 |
| 25 | நடமாடும் கடை நெடுந்தூர பஸ் நிலையம் பயணிகள் பேருந்து நிலையம் | இல 01 | 20,000.00 | 70,833.33 |
| 26 | நடமாடும் கடை பண்ணை மீன்சந்தை | இல 01 | 20,000.00 | 72,000.00 |
| 27 | நவீனசந்தையில் அமைந்துள்ள மலசல கூடத் தொகுதி சுத்திகரித்து பராமரிக்கும் சேவை | | 1,000.00 | 8,166.67 |
| 28 | நல்லூர் சந்தைப்பகுதியில் அமைந்துள்ள மலசல கூடத் தொகுதி சுத்திகரித்து பராமரிக்கும் சேவை | | 1,000.00 | 4,666.67 |

**கேள்வி அறிவித்தல் - 2025 (22.09.2025 – 31.12.2025)**

**பண்ணை கடற்கரைப்பூங்கா சிற்றுண்டிச்சாலை**

| இல | முகவரி | பிணைப் பணம் | 22.09.2025 - 31.12.2025 வரையான காலப்பகுதிக்கான குத்தகைக்கட்டணம் |
|---|---|---|---|
| 1 | பண்ணை கடற்கரைப் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 20,000.00 | 207,313.67 |

முதல்வர்,
யாழ் மாநகர சபை





# பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர் யுவதிகளுக்கு வழிகாட்டல்

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலையை விட்டு வெளி யேறிய இளைஞர் யுவதிகளுக்கான தொழில் திறவுகோல் பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு கொடிகாமம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் தலைமையில் அண்மையில் வெள்ளாம் போக்கட்டி கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மனிதவள அபி விருத்தி உத்தியோகத்தர்கள், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தி யோகத்தர்கள், இளைஞர் யுவதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அல்லாரை, வெள்ளாம் போக்கட்டி, கச்சாய், பாலாவி கிராம பிரிவு இளைஞர் யுவதிகளுக்கும் விளக்கமளிக்கும் நிகழ்வில் வளவாளர்களாக பிரதேச செயலக மனிதவள மற்றும் திறன் விருத்தி பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# முன்பள்ளி கொத்தணிகளின் முழு நிலா நாள்!

கிளிநொச்சி வடக்கு வலயக் கல்வி அலுவலகத்தின் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு கலைக் கல்வி கோட்டம் நடத்திய கலைமகள், உதயதாரகை முன்பள்ளி கொத்தணி களின் முழு நிலா நாள் நிகழ்வு நேற்று (12) கலைமகள் முன்பள்ளி கலையரங் கில் பளையின் வலய இணைப்பாளர் திருமதி உதயஸ்ரீ லங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது .

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலனும் சிறப்பு விருந்தினராக மேனாள் ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் பெருமாள் கணேசனும் கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை பிரதேச சபை செயலாளரும் பச்சிலைப் பள்ளி அபிவிருத்தி சங்கத்தின் (சுவிஸ்) உறுப்பினருமான நவரத்தினம் பாலச் சந்திரன் மற்றும் பிரதேச செயலகம் சார்பில் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சி.சயந்தினியும் கலந்து கொண்டனர்.





# நாட்டுக்குள் கஞ்சா பயிரிடுவதற்கு 7 வெளிநாட்டவர்களுக்கு அனுமதி

இலங்கையில் சட்டப்பூர்வமாக கஞ்சா பயிரிட ஏழு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கடுமையான நிபந்தனைகளின் கீழ் அரசாங்கம் அனுமதி அளித்துள்ளதாக ஆயுர்வேதத் துறையின் முன்னாள் ஆணையர் ஜெனரல் டாக்டர் தம்மிகா அபேகுணவர்தன தெரிவித்தார்.

இலங்கை முதலீட்டு சபையின் கீழ் ஒரு திட்டமாக இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கஞ்சா சாகுபடி திட்டத்திற்காக 37 விண்ணப்பதாரர்களில் இருந்து இந்த ஏழு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் இலங்கை முதலீட்டு சபையின் கீழ் அவர்களுக்கு இதற்கான சட்டப்பூர்வ அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

முதல் கட்டத்தில், ஒவ்வொரு முதலீட்டாளருக்கும் ஆறு மாதங்களுக்கு தற்காலிக உரிமம் வழங்கப்பட்டுள்ளது. முன்னேற்ற அறிக்கைகளின் அடிப்படையில் சாகுபடி காலத்தை நீடிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஒரு நிபந்தனையாக, ஒவ்வொரு முதலீட்டாளரும் உத்தரவாதமாக இலங்கை மத்திய வங்கியில் 2 மில்லியன் அமெரிக்க டொலர் பத்திரத்தை வைப்புச் செய்ய வேண்டும். இந்த திட்டத்திற்கான மேற்பார்வை அதிகாரியாக செயல்படும் டாக்டர் அபேகுணவர்தன, கஞ்சா சாகுபடி முயற்சியைத் தொடங்க தேவையான குறைந்தபட்ச முதலீடு 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று மேலும் கூறினார்.

இலங்கையில்பயிரிடப்படும்அனைத்து கஞ்சாவும் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். மேலும் அது மருந்து உற்பத்தி மற்றும் சோதனை நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதை அரசாங்கத்திற்கு உறுதி செய்ய வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் இலங்கை முதலீட்டு சபை தொடர்ந்து கண்காணித்து வரும். இந்த முயற்சிக்காக, இலங்கை முதலீட்டு சபையின் கீழ் 64 ஏக்கர் நிலம் ஏற்கனவே மீரிகம பகுதியில் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள இலங்கை சட்டத்தின் கீழ், விதைகள், இலைகள் அல்லது வேர்கள் உட்பட கஞ்சா செடியின் எந்தப் பகுதியும் சாகுபடியின் போது வெளிப்புற சூழலுக்குள் விடப்படாமல் இருப்பதை உறுதி செய்ய கடுமையான விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன.

கூடுதலாக, சாகுபடி செய்யும் இடம் ஒரு பாதுகாப்பான வேலியால் சூழப்பட வேண்டும், மேலும் முதலீட்டாளர்கள் வளாகத்திற்கு விசேட அதிரடிப் படை மற்றும் பொல்க்ஸ் பாதுகாப்பை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று டாக்டர் அபேகுணவர்தன வலியுறுத்தினார்.

அனைத்து கஞ்சாவும் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். மேலும் நாட்டிற்குள் அதனைப் பயன்படுத்த முடியாது என்றும் கூறப்பட்டது.

# பச்சிலைப்பள்ளி பிரதேச பாடல் நயத்தல் போட்டிகள்



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கலாசார அலுவல்கள் அலகால் வருடாந்தம் நடத்தப்படும் பிரதேச கலை இலக்கிய போட்டிகளில் இந்த வருடத்துக்கான (2025) கனிஷ்ட ,சிரேஷ்ட, அதிசிரேஷ்ட பிரிவுகளுக்கான பாடல் நயத்தல் போட்டிகள் நேற்று (12) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றன.

# பரு., உடுவில் பிரதேசங்களில் நாளை விசேட நடமாடும் சேவை

பருத்தித்துறை மற்றும் உடுவில் பிரதேசங்களில் நாளை 14 ஆம் திகதி நடைபெறவுள்ள விசேட நடமாடும் சேவையை மக்களுக்கு பயனுறுதி வாய்ந்த வகையில் வழங்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அரச அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

விசேட நடமாடும் சேவை தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தின் 'கிளீன் ஶ்ரீலங்கா' செயற்றிட்டத்துக்கு அமைய, " இதய பூர்வமான யாழ்ப்பாணத்துக்கு – ஒற்றுமையின் தூய்மையான நெடும் பயணம்" எனும் கருப்பொருளில் இந்த நடமாடும் சேவை நாளை 14 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும், 15 ஆம் திகதி உடுவில், தெல்லிப்பளை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் உடுவில் பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகம், வடக்கு மாகாண சபை, மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பன இணைந்து இந்த நடமாடும் சேவையை ஒழுங்குபடுத்தவுள்ளன. மக்கள் பயன்பெறும் வகையில் இந்த நடமாடும் சேவையை வினைத்திறனாக நடத்தி முடிப்பதற்கு அனைவரதும் ஒத்துழைப்பும் தேவை என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த நடமாடும் சேவையில் ஆள் பதிவுச் சேவை, பிறப்பு இறப்புச் சான்றிதழ் வழங்கும் சேவைகள், ஓய்வூதியச் சேவைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சேவைகள், மோட்டார் வாகனப் பதிவுகள், கம்பனிப் பதிவுகள், சுகாதார சேவைகள், ஏற்றுமதிக்கான வாய்ப்புகள், வடக்கு மாகாணத்தின் சகல அமைச்சுகளுக்கும் உரிய சேவைகள், பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரிய சேவைகள் உள்ளிட்ட சேவைகள் நடைபெறவுள்ளன.

# வீதியோரம் வியாபாரம் செய்வோருக்கு கல்முனை பொலிஸாரின் அறிவுறுத்து!

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் வாகனப் போக்கு வரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டத்துக்கு இடையூறு ஏற்படுவதால் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு கல்முனை பொலிஸார் பல்வேறு அறிவுறுத்தல்களை விடுத்துள்ளனர்.

வியாபாரப் பொருள்கள் மற்றும் வியாபார தளங்களின் விளம்பர பலகைகளை வீதிகளில் வைத்தல், வாகனங்களை நீண்ட நேரமாக வீதிகளில் நிறுத்தி வைத்தலும் மற்றும் திருத்த வேலை செய்தலும், உணவுப் பொருள்களையும் மற்றும் பழ வகைகளையும் பாதுகாப்பற்ற முறையிலும், திறந்த நிலையிலும் விற்பனை செய்தல், கால் நடைகளை பாதுகாப்பற்ற நிலையில் வீதிகளில் நடமாடவிடல், கழிவு நீர்களை வீதிகளில் விடுதல் போன்ற இவ்வாறான குற்ற செயல்களை தொடர்ச்சியாக செய்து வருவதால் பொதுமக்கள் பலவகையான சிரமங்களை எதிர் கொள்கின்றார்கள்.

ஆகையால், இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து தவிர்ந்து கொள்ளுமாறும் பொதுமக்கள் சிரமங்கள், அசௌகரியங்களிலிருந்தும் பயணிப்பதற்கு உதவுமாறு வியாபாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான தகவல்களை தாங்களே இனங்கண்டு குறித்த குற்றங்களில் இருந்து விலகிக் கொள்ளுமாறும் தொடர்சியாக இவ்வாறான விடயங்களை மேற் கொள்பவர்களுக்கு எதிராக 15 ஆம் திகதிக்கு பின்னர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறியத் தருகின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நமது நாட்டில் களவு, கொள்ளைகள் இடம் பெறுவதைத் தடுப்பதற்காக தங்களின் பாதுகாப்புக்கு என தங்களது வீட்டிலும், வியாபார நிலையங்களிலும் பொருத்தப்பட்டிருக்கும் சீ.சீ.ரீ.வி. கமராக்கள்உரிய முறையில் செயற்படுகின்றனவா என்பதைப் பரீட்சித்து நடைமுறையில் வைத்து கொள்ளுமாறும் கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2024 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் முதல் பத்து வலயங்களுள் ஐந்து கிழக்கில்!

G.C.E.(O/L) Exami
Performance

**Table 8: G.C.E.(O/L) Examination- 2024**

**Performance of School Candidates (1st Attempt) by Education Zone**
**Arranged in Decending Order of the Percentage Qualified for G.C.E.(A/L)**

| Education Zone | No. Sat for 5 or more subjects | Qualified for G.C.E.(A/L) | | Passed in 6 or more (including 1st Lan. & Maths) with 3 credits | | Failed in All Subjec (Appeared for 6 or more Subjects | |
|---|---|---|---|---|---|---|---|
| | | No. | % | No. | % | No. | % |
| 1 Kandy | 7,827 | 6,687 | 85.44 | 5,972 | 76.30 | 71 | |
| 2 Batticaloa | 2,024 | 1,658 | 81.92 | 1,460 | 72.13 | 11 | |
| 3 Batticaloa Central | 2,411 | 1,972 | 81.79 | 1,731 | 71.80 | 26 | |
| 4 Kalmunai | 2,754 | 2,252 | 81.77 | 1,980 | 71.90 | 10 | |
| 5 Thirukkovil | 826 | 674 | 81.60 | 576 | 69.73 | 2 | |
| 6 Akkaraipattu | 1,872 | 1,520 | 81.20 | 1,338 | 71.47 | 9 | |
| 7 Mulatiyana (Hakmana) | 2,507 | 2,033 | 81.09 | 1,800 | 71.80 | 30 | |
| 8 Walasmulla | 3,314 | 2,655 | 80.11 | 2,368 | 71.45 | 37 | |
| 9 Colombo | 14,331 | 11,415 | 79.65 | 10,538 | 73.53 | 297 | |
| 10 Matara | 6,082 | 4,829 | 79.40 | 4,372 | 71.88 | 114 | |

**(வி.ரி.சகாதேவராஜா)**

க.பொ.த.சாதாரண தர 2024 பரீட்சை முடிவுகளுக்கமைய முதல் தடவையில் கூடிய மாணவர்களை க.பொ.த. உயர்தர வகுப்புகளில் கல்வி கற்க வாய்ப்பை அளித்த தேசிய மட்டத்தில் முதல் பத்து வலயங்கள் பற்றிய தகவலை பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதன்படி இரண்டாம் இடத்தை மட்டக்களப்பு வலயமும், மூன்றாவது இடத்தினை மட்டக்களப்பு மத்தி வலயமும் பெற்றுக் கொண்டன. நான்காம் இடத்தை கல்முனை வலயமும், ஐந்தாவது இடத்தை திருக்கோவில் வலயமும், ஆறாவது இடத்தை அக்கரைப்பற்று வலயமும் பெற்றுக் கொண்டன.

மொத்தத்தில் முதல் பத்து இடங்களில் ஐந்து வலயங்கள் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த வலயங்கள் என்பதும் வடக்கில் இருந்து எந்தவொரு வலயமும் இந்த முதல் பத்து வலயங்களுள் வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.






# அறுகம்பே அபிவிருத்தி போரம் அரை மரதன் போட்டியில் சாதனை

**(றியாஸ் ஆதம்)**

அறுகம்பே அபிவிருத்தி போரம் 7 ஆவது தடவையாகவும் அரை மரதன் போட்டியை நடத்திச் சாதனை படைத்துள்ளது.

அறுகம்பே அரை மரதன் ஓட்டப் போட்டியில் 21.1 கிலோ மீற்றர் போட்டி நிகழ்ச்சியில் ஆண்கள் பிரிவில் இலங்கையைச் சேர்ந்த ரீ.டபிள்யூ.ரத்னபாலவும் பெண்கள் பிரிவில் சுவிஸை ச் சேர்ந்த அலக்சான்டா பேகேவும் முதலிடங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத்தை இலங்கையைச் சேர்ந்த கலன விஜயவிக்ரமவும், மூன்றாமிடத்தை ஜேர்மனியை சேர்ந்த மெதிஸ் அடமும் பெற்றுக்கொண்டனர். பெண்கள் பிரிவில், இரண்டாமிடத்தை நெதர்லாந்தைச் சேர்ந்த லியோனியும், மூன்றாமிடத்தை சுவிஸலாந்தைச் சேர்ந்த எலினாவும் பெற்றுக்கொண்டனர்.

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டு அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியம் ABAY Holidays நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடத்திய அறுகம்பே அரை மரதன் ஓட்டப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை (10) பொத்துவில் அறுகம்பே பிரதேசத்தில் இடம்பெற்றது.

உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் என சுமார் 350 பேர் கலந்துகொண்ட குறித்த மரதன் ஓட்டப்போட்டியானது 21.1 கிலோ மீற்றர் அரை மரதன், 10கிலோ மீற்றர் மற்றும் 5 கிலோ மீற்றர் என மூன்று பிரிவுகளாக இடம்பெற்றது. அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும், இயன்மருத்துவருமான இஸட்.எம்.ஹாஜித் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.அப்துல் வாசித் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.அஹமட் நசீல், பொத்துவில் பிரதேச சபையின் உப தவிசாளர் ஏ.மாபிர், பொத்துவில் ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் நித்தின் ரணவக்க, சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எப். உவைஸ், அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியத்தின் ஸ்தாபக தலைவரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான எம்.எச்.எம்.ஜமாஹிம் உள்ளிட்ட உயர்பீட உறுப்பினர்கள் மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த மரதன் போட்டியில் கலந்துகொண்டு முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்குப் பதக்கம் மற்றும் சான்றுதழ்களுடன் பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அறுகம்பே அபிவிருத்தி போரம் 7 ஆவது தடவையாக அரை மரதன் ஓட்டப் போட்டியை வெற்றிகரமாக நடத்தி சர்வதேச தரத்தில் புகழ்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த முறை இடம்பெற்ற அரை மரதன் ஓட்டப் போட்டியில் 22 நாடுகளை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் கலந்து கொண்டனர். குறித்த போட்டியில் பங்கேற்பதற்காகவும் அறுகம்பை பிரதேசத்தை பார்வையிடுவதற்காகவும் வருகை தந்தனர் என்று வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் குறிப்பிட்டனர்.









# ஊழியர்களின் உழைப்பை உறிஞ்சும் அரச பொறிமுறையை நிறுத்துங்கள்!

## இலங்கை வங்கி ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டம்




(எஸ். நிதர்ஷன்)

ஊழியர்களின் நலனில் அக்கறை எடுக்காமை, போனஸ் குறைப்பு உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கோரியும் அதற்கான முயற்சிகளில் அரசின் அசமந்தப் போக்குக்கு எதிர்ப்பு தெரிவித்தும், இன்று (13) யாழ். மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கி கிளை வலையமைப்புக்களை மூடி, அனைத்து பரிவர்த்தனைகளில் இருந்தும் விலக்கி இலங்கை வங்கி ஊழியர் சங்கம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

அத்துடன் தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், எதிர்வரும் காலத்தில் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர் என்றும் இலங்கை வங்கி ஊழியர் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து இலங்கை வங்கி ஊழியர் சங்க உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

"கடந்த 2024 ஆம் ஆண்டு வரலாற்றில் இலங்கை நிறுவனம் ஒன்று பதிவு செய்த மிகச் சிறந்த மற்றும் மிகப்பெரிய இலாபமான 107 பில்லியன் ரூபாயை இலங்கை வங்கியால் பதிவு செய்திருந்தது.

குறிப்பாக இலங்கை வங்கி ஈட்டிய இலாபத்தில் பெரும்பகுதி திறைசேரிக்கே செலவிடப்படுகிறது.

இலங்கை வங்கியின் நிர்வாகமும் இயக்குநர்கள் குழுவும் ஊழியர்களுக்கு வழங்க முடிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட ஊக்கத் தொகையைக் குறைக்கவும், நிதி அமைச்சகத்துடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் நிதி துணை அமைச்சர்கள் இருவரும் எட்டிய ஒப்பந்தங்களைச் செயல்படுத்தவும் நிதி அமைச்சகம் இன்னும் நடவடிக்கை எடுக்காது அசமந்த போக்கிலேயே இருக்கின்றது.

வாக்குறுதிகள் வழங்கப்பட்டு மாதங்கள் பல கடந்துவிட்டன. ஒப்புக் கொள்ளப்பட்ட ஊக்கத்தொகையில் நியாயமற்ற செயற்பாட்டுக்கு எதிராக இந்தத் தொழிற் சங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.வழங்கப்பட்ட வாக்குறுதிகளை செயல்படுத்த நாங்கள் அரசை வலுயு றுத்துகின்றோம்.

துரதிர்ஷ்டவசமாக, இந்தத் தொழிற் சங்க நடவடிக்கைகளை நாங்கள் தொடங்க வேண்டியிருந்தது.

ஆனாலும் இன்றைய சூழ்நிலையில் இதுபோன்ற பல தொழிற்சங்க நடவடிக் கைகளை நாங்கள் ஏற்பாடு செய்யவே வண்டியுள்ளது.

அந்தவகையில் அரசு தீர்வுகளை வழங்கவில்லை என்றால், தொடர் வேலை நிறுத்தத்தை மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம்." .- என்றனர்.





# தி.மு.கவில் இணைந்தார் அ.தி.மு.க. மைத்ரேயன்

அ.தி.மு.க. அமைப்புச் செயலாளராக இருந்த டாக்டர் வா.மைத்ரேயன், இன்று காலை மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்துள்ளார்.

அவர் இணைவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர், அவரை அ.தி.மு.கவின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்குவதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்திருந்தார்.

இது தொடர்பாக இபிஎஸ் வெளியிட்ட அறிக்கையில்,

“கழகத்தின் கொள்கை - குறிக்கோள்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும்; கழகத்தின் சட்ட திட்டங்களுக்கு மாறுபட்டு, கழகத்தின் ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்துகொண்டதாலும்; கழகத்தின் கண்ணியத்திற்கு மாசு ஏற்படும் வகையில், கழகக் கட்டுப்பாட்டை மீறி கழகத்திற்கு களங்கமும் அவப் பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினா



லும், டாக்டர் வா.மைத்ரேயன், முன்னாள் எம்.பி. கழக அமைப்புச் செயலாளர் இன்று முதல் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார். கழக உடன்பிறப்புகள் யாரும் இவருடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என கேட்டுக்கொள்கிறேன்.” என்று தெரிவித்திருந்தார்.

பிரபல மருத்துவரான வா.மைத்ரேயன் கடந்த 1991 இல் பா.ஜ.கவில் இணைந்து, மாநில செயற்குழு உறுப்பினர், மாநில அறிஞர் அணி தலைவர், பொதுச் செயலாளர், மாநில துணை தலைவர் என பல்வேறு பதவிகளை வகித்தார்.

பின்னர், 1999 ஆம் ஆண்டு பா.ஜ.கவில் இருந்து விலகி அ.தி.மு.கவில் இணைந்தார். 2002 ஆம் ஆண்டு அ.தி.மு.க. சார்பில் மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு 2017 இல் ஓ.பி.எஸ். தர்மயுத்தம் தொடங்கிய போது, அவரது அணியில் மைத்ரேயன் இருந்தார். கட்சியில் ஒற்றைத் தலைமை சர்ச்சை எழுந்த நிலையில், பழனிசாமி அணிக்கு தாவினார்.

பின்னர், 2022 இல் மைத்ரேயன், ஓபிஎஸ் முன்னிலையில் அவரது அணியில் இணைந்தார். அதனைத் தொடர்ந்து அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2023 ஜூன் மாதம் அவர் பாஜகவில் இணைந்தார். பின்னர் மீண்டும் 2024 இல் அவர் அ.தி.மு.கவில் இணைந்தார்.

பா.ஜ.க, அ.தி.மு.க என ஸ்டன்டிங் அடித்த மைத்ரேயன் இன்று காலையில் தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்துள்ளார்.

# 12 ஆவது நாளாக தொடர்க்கின்றது தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்

தனியார் நிறுவனம் வழங்கும் பணப்பலன் உறுதிசெய்யப்படும். எனவே தூய்மைப் பணியாளர்கள் உடனடியாக பணிக்குத் திரும்ப வேண்டும் என்று சென்னை மாநகராட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது. சென்னை மாநகராட்சி மண்டலம் 5, 6 பகுதிகளுக்கான தூய்மைப் பணி தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.



இதை எதிர்த்தும், பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் இரண்டு மண்டல தூய்மைப் பணியாளர்களில் என்.யூ.எல்.எம். பிரிவைச் சேர்ந்தவர்கள் கடந்த 12 நாள்களாக ரிப்பன் மாளிகை அருகே போராட்டம் நடத்தி வருகின்றனர். தூய்மைப் பணியாளர்களுடன் 12 இற்கும் மேற்பட்ட சுற்றுகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்த நிலையில், தொடர்ந்து வேலைநிறுத்தம் நடைபெற்று வருகிறது.

# பாடசாலை மாணவர்களிடம் நாட்டு வெடிகுண்டு: உரிய நடவடிக்கை எடுக்க இ.பி.எஸ். வலியுறுத்தல்

படிக்கும் மாணவர்கள் கையில் இருக்க வேண்டியவை புத்தகங்கள்; வெடிகுண்டுகள் அல்ல. நாட்டு வெடிகுண்டு விவகாரம் குறித்து உரிய விசாரணை நடத்தப்பட்டு, தக்க சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தூத்துக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவர் கொண்டு வந்த நாட்டு வெடிகுண்டு வெடித்ததில் இரண்டு மாணவர்கள் காயமடைந்துள்ளனர் என வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

இதில் ஒரு மாணவருக்கு கை முழுமையாக சிதைந்துள்ளதாகவும், மற்றொரு மாணவருக்கு கண்ணில்



காயம் எனவும் செய்திகள் வருகின்றன.பள்ளி மாணவர்கள் இடையே கத்திக் குத்து, புத்தகப் பையில் அரிவாள், அரசுக் கல்லூரிக்குள் நாட்டு வெடிகுண்டு. கல்வியிற் சிறந்த தமிழ்நாடு என்ற புகழோடு அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த தமிழ்நாட்டை, ‘ஸ்டாலின் மொடல்’ அரசு இட்டுச் சென்றுள்ள நிலை இது தான்.

நான் அரசியல் ரீதியான விமர்சனங்கள் வைத்தால் மட்டும் பாய்ந்து வந்து வீர வசனம் பேசும் முதல்வர் ஸ்டாலின் மக்களுக்கான கேள்விகளை, குறிப்பாக சட்டம் ஒழுங்கைப் பற்றிக் கேட்டால் மட்டும் பம்மிப் பதுங்கிக் கொள்வது ஏன்? படிக்கும் மாணவர்கள் கையில் இருக்க வேண்டியவை புத்தகங்கள்; வெடிகுண்டுகள் அல்ல.

நாட்டு வெடிகுண்டு விவகாரம் குறித்து உரிய விசாரணை நடத்தப்பட்டு, தக்க சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்டாலின் மொடல் தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன். ஆயுதங்கள், வெடிகுண்டு என தமிழ் நாட்டை கொலைக் களமாக மாற்றி வரும் தி.மு.க. ஆட்சியிடம் இருந்து மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்.” என்று தெரிவித்துள்ளார்.

# இந்தியா, பாகிஸ்தானுடன் அமெ. உறவு நன்றாக உள்ளது

## வெளியுறவுத்துறை கருத்து



இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுடனும் அமெரிக்காவின் உறவு நன்றாக உள்ளது என்று அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் டாமி புரூஸ்,

" இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுடனும் அமெரிக்கா இணைந்து பணியாற்றுவது பிராந்தியத்திற்கும், உலகிற்கும் ஒரு நல்ல செய்தி. இது நன்மை பயக்கக்கூடிய எதிர்காலத்தை உருவாக்கும்.

இரு நாடுகளுடனும் எங்கள் உறவு முன்பு போலவே உள்ளது, அது நல்லது என்று நான் கூறுவேன். அனைவரையும் அறிந்த, அனைவரிடமும் பேசும் ஒரு அதிபர் இருப்பதனால் ஏற்பட்ட நன்மை இதுதான். இதன் மூலமாக நாம் கருத்து வேறுபாடுகளை சரிசெய்ய முடியும். எனவே நமது ராஜதந்திரிகள் இரு நாடுகளிடமும் நல்ல உறவை பராமரிக்க உறுதிபூண்டுள்ளனர்." என்றார்

மேலும், "இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மே மாதம் நடந்த மோதல், மிகவும் பயங்கரமான ஒன்றாக வளர்ந்திருக்கும். துணை அதிபர் ஜே.டி.வான்ஸ், அதிபர் ட்ரம்ப் மற்றும் வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ ஆகியோர் இந்த விவகாரத்தில் உடனடி அக்கறை காட்டி தாக்குதல்களை நிறுத்தினர். இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பேரழிவைத் தடுப்பதில் அமெரிக்காவின் உயர்மட்டத் தலைவர்கள் முக்கிய பங்கு வகித்தனர்." என்றார்.





# காட்டுத்தீ காரணமாக தென் ஐரோப்பாவில் கொடிய வெப்ப அலை; மூவர் உயிரிழப்பு

தெற்கு ஐரோப்பாவை தாக்கிவரும் வெப்ப அலை காரணமாக குறைந்தது மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

தெற்கு ஐரோப்பிய நாடுகள் பல வற்றில் ஏற்பட்டுள்ள நூற்றுக்கணக்கான காட்டுத்தீ அனர்த்தங்கள் காரணமாக, வெப்ப அலை அதிகரித்துள்ளதுடன் பல்லாயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் பால்கன் நாடுகள் முழுவதும் சிவப்பு வெப்ப எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

30க்கும் மேற்பட்ட காட்டுத்தீ அனர்த்தங்களுக்கு மத்தியில் ஸ்பெயினில் 6,000க்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்துள்ளது டன்,மொரோக்கோவின் உதவியுடன் போர்த்துக்கல் மூன்று பாரிய தீப்பரவலை எதிர்த்துப் போராடுகிறது.

கிரேக்கத்தில்150க்கும் மேற்பட்ட காட்டுத்தீ அனர்த்தங்கள் பதிவாகியுள்ளன. இதில் பல வீடுகள் மற்றும் சுற்றுலாப் பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன,

மொண்டினீக்ரோ, அல்பேனியா, துருக்கி மற்றும் குரோஷியாவிலும் பாரிய தீப்பரவல்கள் பதிவாகியுள்ளன.

இதனிடையே,காட்டுத்தீ பரவலால் ஸ்பெயினில், மட்ரிட் பகுதியில் ஒருவர் கடுமையான தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

அத்துடன், இத்தாலியில் வெப்பத் தாக்கம் காரணமாக சிறுவனொருவர் உயிரிழந்தார்.

அதேநேரம், சார்டினியா தீவில் சிற்றுந்து ஒன்றினுள் மயக்கமடைந்திருந்த நான்கு வயது ருமேனிய சிறுவன் ஒருவர், ரோமில் உள்ள மருத்துவமனையொன்றுக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டார்.

எனினும், வெப்ப அதிர்ச்சி ஏற்பட்டு மீளமுடியாத மூளை பாதிப்பு காரணமாக அவர் உயிரிழந்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# காசா மீதான இஸ்ரேலிய தாக்குதலில் உணவுக்காக காத்திருந்த 89 பேர் பலி



இஸ்ரேலியப் படைகள் காசா நகரத்தை ஆக்கிரமிக்கத் தயாராகி வரும் நிலையில், அங்கு இஸ்ரேலியப் படைகளால் கடுமையான வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஹமாஸின் சிவில் பாதுகாப்பு நிறுவனம் இதனைத் தெரிவித்துள்ளது.

ஜெய்டவுன் மற்றும் சப்ராவின் குடியிருப்புப் பகுதிகள், கடந்த மூன்று நாட்களாகக் குண்டுகள் மற்றும் ட்ரோன் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ளன.

அவை பொதுமக்கள் வீடுகளுக்குப் பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளன.

அதேநேரம், இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் மீட்க முடியவில்லை என்றும் ஹமாஸின் பேச்சாளர் மஹ்மூத் பஸ்ஸல் கூறியுள்ளார்.

இதற்கிடையில், இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் ஜப்பான் ஆகியவை தங்கள் கண்களுக்கு முன் பாதப் பஞ்சம் பரவி வருகிறது என்று குறிப்பிட்டுள்ளன.

எனவே, பட்டினியை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த நாடுகள் இஸ்ரேலை வலியுறுத்தியுள்ளன.

கனடா முரசு

புதன்கிழமை | 13/08/2025

**உலகக் கிண்ண போட்டிகளுக்கான தன்னார்வலர் பதிவுகள் ஆரம்பமாகின**




C02



# கனடாவில் ஆபத்தான நபராக பெயரிடப்பட்ட தமிழ் இளைஞன்

**கனடாவில் ஆபத்தான நபராக பெயரிடப்பட்டுள்ள தமிழ் இளைஞன் ஒருவர் தேடப்பட்டு வருவதாக பீல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

**ரொரன்ரோவை சேர்ந்த 36 வயதான பிரதீபன் நாகராஜா என்பவரே தேடப்பட்டு வருபவர் என்று குறிப்பிட்டுள்ளனர்.**

**மேற்படி நபர் மீது , இரண்டு கொலை முயற்சி, துப்பாக்கி சூடு மேற்கொண்டமை மற்றும் அங்கீகரிக்கப்படாத துப்பாக்கியை வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.**

பிரதீபன் நாகராஜாவுடன் தொடர்பு கொண்டிருந்த எவரும் அல்லது அவர் இருக்கும் இடம் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவரைக் கண்டுபிடிப்பவர்கள் அவரை அணுகாமல், உடனடியாக 911 என்ற எண் அல்லது 905-453-2121 அல்லது 4990 என்ற எண்ணிற்கு அழைக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கியூபெக்கில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் பலி

கனடாவின், மேற்கு கியூபெக்கில், லஸ்க்வில் அருகே இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒரு இளைஞர் உயிரிழந்துள்ளார்.

கியூபெக் பொலிஸார் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

நெடுஞ்சாலை 148-இல் செமின் டி லா மோன்டாக்னே அருகே உள்ள ஒரு பகுதிக்கு பொலிஸார் அழைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு கிழக்கு நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் விபத்துக்குள்ளாகியிருந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




பாதிக்கப்பட்டவர் காடினோவைச் சேர்ந்த 18 வயது இளைஞர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தின் சூழ்நிலைகள் இன்னும் விசாரணையில் உள்ளதாகவும் வேறு எந்த விவரங்களும் வெளியிடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.







# உலகக் கிண்ண போட்டிகளுக்கான தன்னார்வலர் பதிவுகள் ஆரம்பமாகின

கனடாவின் டொரோன்டோவில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடருக்கான சேவைகளை வழங்கும் தன்னார்வலர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டில் சர்வதேச உதைபந்தாட்டப் பேரவையினால் நடத்தப்படும் உலகக் கிண்ணப் போட்டித் தொடர் அமெரிக்கா, மெக்ஸிக்கோ மற்றும் கனடாவில் நடைபெறவுள்ளது.

டொரோன்டோ நகரம், உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடருக்கான தன்னார்வலர் ஆள் சேர்ப்பு பணிகளை அதிகாரப்பூர்வமாக ஆரம்பித்துள்ளது.

டொரோன்டோவில் ஆறு உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ளன. கனடிய அணி பங்கேற்கும் உலகக் கிண்ணப் போட்டியொன்றும் இதில் உள்ளடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ணப் போட்டித் தொடருக்கான ஏற்பாட்டுப் பணிகளுக்கு பெரும் எண்ணிக்கையிலான தன்னார்வலர்களின் ஒத்துழைப்பு தேவைப்படுவதாகவும் டொரோண்டோவில் சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தன்னார்வலர்களின் ஒத்துழைப்பு தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




# ஹமில்டனில் சமூக ஊடக பதிவினால் இடைநீக்கப்பட்டார் பொலிஸ் அதிகாரி

கனடாவின் ஹமில்டனில் சமூக ஊடகப் பதிவு காரணமாக பொலிஸ் அதிகாரி ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பக்கச்சார்பான மற்றும் சர்ச்சைக்குரிய வகையில் அந்த அதிகாரி சமூக ஊடகத்தில் பதிவிட்டார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி பொலிஸ் அதிகாரிக்கு எதிராக உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் அதிகாரியினால் பதிவிடப்பட்ட சமூக ஊடகப் பதிவுகள் குறித்து ஊடக நிறுவனமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த தகவலைத் தொடர்ந்து அந்த பொலிஸ் அதிகாரி பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி அதிகாரி கடந்த 23 ஆண்டுகளாக பொலிஸ் சேவையில் ஈடுபட்டு வருபவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் அதிகாரிகள், பாரபட்சமான அடிப்படையில் பொதுவெளியில் கருத்து வெளியிடுவது ஏற்புடையதல்ல என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளின் பின்னர் அந்த

அதிகாரி தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட உள்ளது.